


நகர் ஊரமைப்புத் துறை - (DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

மூலனூர் பேரூராட்சி

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், மூலனூர் பேரூராட்சி, மற்றும் கிராமம், ரீ.ச.எண்:1446/1B, -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டமில்லாப் பகுதி)

அளவு : 1:400 (1 செ.மீ = 4மீ)

இணையதள விண்ணப்ப எண் : GQ8IVB5X நாள்: 05.09.2023

வ

குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பு : 2.25 ஏக்கர் (அ) 9100.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 42

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை

பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை):

I. மனைப்பிரிவு சாலை பரப்பு : 2220.19 ச.மீ (மூலை முடக்குகள் உட்பட)

II. பூங்கா

i). ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 10%

: (9100.00 - 2220.19) x 10% = 687.98 ச.மீ

ii) TNCDBR - 2019 விதி 47(6) ன் படி 687.99 ச.மீ (10%) பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகை ரூ.121974 நாள்.10.10.2023 அன்று மனுதாரரால் உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

III. பொது உபயோகம் (மனைப்பிரிவின் மொத்த பரப்பில் சாலை பரப்பு நீங்களாக 1%)

A). LOCAL BODY- க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9100.00 - 2220.19)x0.5 %= 34.40 ச.மீ

ஒப்படைக்கப்பட்டவை : 38.66 ச.மீ (0.56 %)

B). TANGEDCO - க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9100.00 - 2220.19)x 0.5 %= 34.40 ச.மீ

ஒப்படைக்கப்பட்டவை : 47.85 ச.மீ (0.70 %)

கட்டிட வரம்பு: 9.00 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்படல் வேண்டும்
9.00மீ க்கு மேல் 30.5மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்

மூலை முடக்கு : 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ விடப்படல் வேண்டும்.
12.0மீ க்கு மேல் உள்ள சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்: 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 04.02.2019 அரசாணை எண்: 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 31.01.2020 - ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
2. அரசாணை எண்: 181, நகராட்சி நிர்வகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 09.12.2020 மற்றும் அரசாணை எண் 141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:16.07.2022 - ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர் தேக்கத்தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெரு விளக்கு வசதிகள் ஆகியனவை பேரூராட்சியின் விருப்பத்திற்கேற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு பேரூராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத்துறையாலும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், செயல் அலுவலர், மூலனூர் பேரூராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து உள்ளாட்சி பொறியாளரிடமிருந்து தகுதி சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைக்கேற்ப குறைந்த மின் அழுத்த கம்பிப்பாதையினை மனுதாரர் தன் சொந்த செலவில் மாற்றி அமைத்து கொள்ளப்பட வேண்டும்.

SWP / DTCP / TIRUPPUR / LAYOUT NO :290/2023

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.

Signature valid Signature Not Verified
Signed by: Assistant Director
Location: Tiruppur
Date: 2023.11.03 17:03:03

ரா.மணிவேல்
உதவியாளர்/உதவி வரைவாளர்

Signature valid Signature Not Verified
Signed by: Assistant Director
Location: Tiruppur
Date: 2023.11.03 17:07:13

க.பத்மா
மேற்பார்வையாளர்